MCOP. No. 83/2022

Date : 06.02.2025

Witness Name & Rank – நந்தகோபால் – PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 3 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

1. நான் ஓட்டி சென்றதாக சொல்லப்படும் TN 42 AE 9099 என்ற வாகனத்திற்கு காப்பீடு மற்றும் எனக்கு முறையான ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. எனது ஓட்டுநர் உரிமம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 2 வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதில் மனு குறித்து படித்துப்பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் தெரியும். 2 வது எதிர்மனுதாரர் தனது பதில் உரையுடன் அந்த வாகனத்தை விற்பனை செய்தது தொடர்பாக ஆவணம் தாக்கல் செய்தது தெரியுமா என்றால் தெரியும். 2 வது எதிர்மனுதாரர் விபத்து ஈடுபட்டதாக சொல்லப்படும் கார் பதிவு எண். TN 38 BP 5170 என்ற வாகனத்தை மேட்டுபாளையம் சாலையில் உள்ள ஜெய் கிருஷ்ணா ஆட்டோ சேல்ஸ் பிரைவேட் லிமிடெட் ( True Value) என்ற நிறுவனத்திற்கு கடந்த 20.07.2019 ம் தேதி விற்பனை செய்ததாக ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியும். அதே போல் 2 வது எதிர்மனுதாரர் மேற்படி வாகனத்தை விற்பனை செய்து பெயர் மாற்றம் செய்து கொள்ள TO Form ஆகியவை இணைத்து ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்குரிய சம்பவ விபத்தானது கடந்த 27.03.2022 ம் தேதி நடந்து என்றால் சரிதான். மேற்குரிய வாகனமானது 2 வது எதிர்மனுதாரர் விற்பனை செய்து 3 ஆண்டுகள் கழித்து தான் விபத்திற்குள்ளாகியுள்ளது என்றால் சரிதான். 1 வது எதிர்மனுதாரர் தான் விபத்து சமயத்தில் வாகனம் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். 1 வது எதிர்மனுதாரர் True Value நிறுவனத்திடம் இருந்து விபத்து ஏற்படுத்தி காரை வாங்கி பெயர் மாற்றாமல் ஓட்டி வந்தார் என்றால் சரிதான்.

2. 2 வது எதிர்மனுதாரர் தனது பதில் உரையில் 1 வது எதிர்மனுதாரர் யார் என்றே தெரியாது என குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரிதான், வண்டியை விற்றுள்ளார்கள். 2 வது எதிர்மனுதாரர் தனது பதிலுரையில் ஜெய் கிருஷ்ணா ஆட்டோ சேல்ஸ் பிரைவேட் லிமிடெட் ( True Value) என்ற நிறுவனத்தை உரிய தரப்பினராக சேர்க்கப்பட வேண்டும் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். 2 வது எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள பதில் உரையில் 2 வது ஆவணமாக 04.01.2023 ம் தேதி 1 வது எதிர்மனுதாரருடன் உறுதிமொழி ஆவணமாக மேற்குரிய விபத்து ஏற்படுத்தி

வாகனத்திற்கும், 2 வது எதிர்மனுதாரருக்கும் யாதொறு சம்மந்தமும் இல்லை என்றும் 1 வது எதிர்மனுதாரர் மட்டுமே முழு இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றும் இந்த MCOP எண். 83/2022 வழக்கை தொட்டு ஆவணம் எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி உறுதி மொழி ஆவணத்தில் 1 வது எதிர்மனுதாரர் ஒத்துக்கொண்டு கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு முறையான காப்பீடு இல்லாமல் வாகனத்தை இயக்கியது 1 வது எதிர்மனுதாரரின் கவனக்குறைவே காரணம் என்றும் 2 வது எதிர்மனுதாரருக்கும் இந்த இழப்பீடு வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் முழு இழப்பீடு வழங்க 1 வது எதிர்மனுதாரர் மட்டுமே கடமைப்பட்டவர் என்றால் சரிதான். எனது மருத்துவ செலவாக ரூ.3,78,793/- ரூபாய் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இருந்த போதும் நான் இழப்பீடாக ரூ. 30 லட்சம் மிகைப்படுத்தி கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கும் 2 வது எதிர்மனுதாரருக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரிதான். எனவே 2 வது எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

(Sd/-)K.Yuvaraj,B.A.,B.L.,

சார்பு நீதிபதி, பல்லடம்.

---